64

வேளாண்மை - உழவர்
நலத் (வே.உ.3) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-9.

அரசுக் கடித (டி) எண். 127/வே.உ.3/2022, நாள் 28.05.2022

அனுப்புநர்
திரு. சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப.,
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர்,
விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்றுத் துறை,
கோயம்புத்தூர்-13. (இணைப்புடன்)

ஐயா,

பொருள்: வேளாண்மை – உழவர் நலன் – நிதி நிலை அறிக்கை அறிவிப்பு எண். 71 - தமிழ்நாட்டில் அங்கக வேளாண்மையை (Organic Farming) ஊக்குவித்தல் - அதிகளவு விவசாயிகளை அங்கக வேளாண்மையில் ஈடுபடுத்துதல் - தமிழக விவசாயிகள் அங்ககச்சான்று உற்பத்தி பொருட்களை எளிதாக சந்தைப்படுத்த கட்டணமில்லா பங்கேற்பு உத்தரவாத சான்றளிப்புத் திட்டம் அறிமுகப்படுத்துதல் - செயல் ஆணை வழங்குவது - தொடர்பாக.

பார்வை:
1. அரசுக் கடித எண். 9950/வே.உ.3/2022-1, நாள் 25.04.2022.
2. தங்களது கடித எண். C2/230/2022, நாள் 29.04.2022.

---

தமிழ்நாட்டில் உழவர்கள், உற்பத்தியாளர்கள், வணிகர்கள், பதப்படுத்துபவர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் நுகர்வோர்களுக்கிடையே சமீப காலமாக அங்கக வேளாண்மை (Organic Farming) முக்கியத்துவம் பெற்று வருகிறது. வேளாண் உற்பத்தியின் நிலையற்ற தன்மை, இரசாயன உரங்கள், களைக்கொல்லிகள், பூச்சிக்கொல்லிகள் பயன்பாட்டினால் ஏற்படும் சூழல் சீர்கேடு ஆகியவற்றை பற்றிய பொது மக்களிடையேயான விழிப்புணர்வு, தமிழகத்தில் அங்கக வேளாண்மையின் வளர்ச்சிக்கு காரணிகளாக அமைந்துள்ளன. நமது மாநிலத்தின் பல்லுயிர் பெருக்கசூழல் சார்ந்த வேளாண்மையும், தட்பவெப்ப நிலையும் அங்கக வேளாண்மைக்கு ஏற்றதாக அமைந்துள்ளது. மேலும், சரிவிகித உணவுக்கு உத்திரவாதம், சுகாதாரமான சுற்றுச்சூழல் மற்றும் ஆரோக்கியமான சமூகம் ஆகியவை அமைய அங்கக வேளாண்மையே சிறந்த தேர்வாகும். உடலுக்கு ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான உணவு கிடைக்க அங்கக வேளாண்மை வகை செய்வதால், அங்கக வேளாண்மையின் தேவை தற்போது பெருகி வருகிறது.

(த.பி.பா.)

2. இதனைக் கருத்திற்கொண்டு, வேளாண்மை - உழவர் நலத் துறையின் 2022-2023-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

அறிவிப்பு எண். 71

> "அங்கக விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் பொருட்களைச் சந்தைப்படுத்தி சான்று பெறுவதற்கு தனியாரிடம் அதிக கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. சந்தைப்படுத்துதலை எளிமையாக்கும் பொருட்டு மாநில, தேசிய அளவில் அங்கக வேளாண் பொருட்களைச் சந்தைப்படுத்த கட்டணமில்லா பங்கேற்பு உத்திரவாத சான்றளிப்பு முறை (PGS) அறிமுகப்படுத்தப்படும்"

3. மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில், 29.04.2022 ஆம் நாளிட்ட தங்களது கடிதத்தில், தமிழ்நாடு அரசு அங்கக வேளாண்மையை (Organic Farming) ஊக்குவிக்கும் நோக்கத்துடனும், அதிகளவு விவசாயிகளை அங்கக வேளாண்மையில் ஈடுபடுத்துவதுடன் அதிக நிலப்பரப்பில் அங்கக வேளாண்மையை செயல்படுத்தும் நோக்கோடும், தமிழக விவசாயிகள் உற்பத்தி செய்யும் அங்ககச்சான்று பெற்ற விளைப்பொருட்களை எளிதாக சந்தைப்படுத்தும் வகையில், கட்டணமில்லா பங்கேற்பு உத்தரவாத சான்றளிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்த தேவையான செயல் ஆணை வழங்கக் கோரிய தங்களது கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தும், அதனை ஏற்றும் இணைப்பில் உள்ள இத்திட்டத்தின் நோக்கம் மற்றும் தமிழ்நாடு பங்கேற்பு உத்திரவாத சான்றளிப்புத் திட்டத்தின் சான்றளிப்பு வழிமுறைகள் ஆகியவற்றை பின்பற்றி கட்டணமில்லா பங்கேற்பு உத்தரவாத சான்றளிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான செயல் ஆணையினை அரசு வழங்குகிறது.

4. கட்டணமில்லா பங்கேற்பு உத்தரவாத சான்றளிப்புத் திட்டம் செயல்படுத்துவதற்கான இணைப்பில் கண்டுள்ள இத்திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றிடும் வகையிலும் அதற்கான வழி முறைகளில் தெரிவித்துள்ளவாறு மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் முறையாக செயல்படுத்தப்படுவதையும் உறுதி செய்து அவ்வப்போது காலமுறை அறிக்கையாக அரசிற்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளருக்காக.

நகல்
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை - 5. (இணைப்புடன்)
தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர்,
சேப்பாக்கம், சென்னை - 5. (இணைப்புடன்)

**இணைப்பு**

**அரசுக் கடித (டி) எண். 127/வேஉ 3/2022, நாள் 28.05.2022**

**திட்டத்தின் நோக்கம்:**

1. தமிழ்நாட்டில் அங்கக பண்ணை பரப்பளவை அதிகரித்தல்.
2. தேவையான அளவில், அதிகளவு ஊட்டச்சத்துக்கள் உள்ள உணவு பொருட்களை உற்பத்தி செய்தல்.
3. ஆரோக்கியமற்ற இரசாயன பொருட்களிலிருந்து விடுபட்டு ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு உத்திரவாதம் அளிக்கும் தரமான உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்தல்.
4. அங்கக வேளாண்மையில் ஈடுபடும் உழவர்கள், பதப்படுத்தும் உற்பத்தியாளர்கள், வணிகர்கள் ஆகியோரின் உற்பத்தி பொருட்களுக்கு உத்திரவாதம் தரும் அமைப்பை ஏற்படுத்துதல்.
5. மாநிலத்தில் சுற்றுச்சூழல் சார்ந்த உற்பத்தி முறைகளை அதிகப்படுத்துதல்.
6. மானாவாரி நிலங்களில் வேளாண் உற்பத்தியை அதிகரித்தல்.
7. அங்கக கார்பன் அளவை அதிகப்படுத்துவதன் மூலம் மண்ணின் வளத்தை அதிகப்படுத்துதல்.
8. பயிர் சாகுபடி செலவை - 40% குறைத்தல் மற்றும் உற்பத்திப் பொருளின் மதிப்பை 25% அதிகரித்தல்.
9. நீடித்த நிலையான, தரமான உற்பத்தியை அதிகரித்தல், குறைந்த இடுபொருள் மேலாண்மை மூலம் உற்பத்திப் பொருட்களின் தரம் மற்றும் ஆயுட்காலத்தை செலவற்ற முறையில் அதிகப்படுத்துதல்.
10. பாதுகாப்பான சுற்றுச்சூழலை ஏற்படுத்துதல்
11. நுகர்வோருக்கு உள்நாட்டுத் தேவை அடிப்படையில் தரமான அங்கக வேளாண் விளைபொருட்கள் வழங்குதல்
12. கால்நடை வளர்ப்பு, கோழி மற்றும் மீன் பண்ணை ஆகியவை உள்ளிட்ட ஒருங்கிணைந்த பண்ணைய முறை மூலம் அதிக வருவாய் ஈட்டுதல்.

**தமிழ்நாடு பங்கேற்பு உத்திரவாத சான்றளிப்புத் திட்டத்தின் (PGS) சான்றளிப்பு வழிமுறைகள்:**

1. ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுவதின் அடிப்படையில் உள்ளூர் குழுக்களை இணைய தளத்தில் பதிவு செய்தல்.
2. பங்கேற்பு உத்திரவாத சான்றளிப்பு (PGS) இணைய தளத்தில் விரைவாக பதிவேற்றம் செய்ய உள்ளூர் குழுக்களின் திறன் மேம்பாட்டுக்கு வழிவகை செய்தல்.
3. உள்ளூர் குழுவினரின் விண்ணப்பங்களை சரிபார்த்தல், குறை ஏற்பட்டால் திருத்தம் செய்து முழுமையான பதிவிற்கு உத்திரவாதம் அளித்தல்.

(த.பியா.)

4. உள்ளூர் குழுவினரின் ஆவணங்களின் முழுமையான பதிவிற்கு உத்திரவாதம் அளித்து உள்ளூர் குழுக்களை அங்கீகாரம் செய்தல்.
5. உள்ளூர் குழுக்களின் தொடர்ச்சியான நடைமுறைகளை இணைய வழியில் கண்காணித்தல்.
6. தங்களிடம் பதிவு செய்த உள்ளூர் குழுக்களை, பதிவு செய்த அடுத்த ஆண்டில் நேரடி கள ஆய்வு செய்தல். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒவ்வொரு குழுவும் மண்டல மன்றத்தால் (Regional Council (RC)) நேரடி கள ஆய்வு செய்யப்பட வேண்டும். எனவே ஒவ்வொரு வருடமும் குறைந்தபட்சம் 50% குழுக்கள் ஆய்வு செய்யப்பட வேண்டும்.
7. உள்ளூர் குழுக்களின் முன்னோடி திறனாய்வு விவசாயிகளின் ஆய்வு அறிக்கைகளைச் சரிபார்த்தல், இணைய தளத்தில் பதிவேற்றம் செய்தல், ஆய்வறிக்கைகளைச் சரிபார்த்து நேரடி கள ஆய்வு செய்தல் மற்றும் குறைபாடுகள் ஏதும் இல்லாத பட்சத்தில் வாய்ப்புச் சான்றிதழ் (Scope Certificate) அளித்தல்.
8. தனிநபர் விவசாயிகள், உற்பத்தியாளர்கள் (பங்கேற்பு சான்றளிப்பு திட்டத்தில் (PGS) சேராதவர்கள்) மற்றும் தனி நபர் அங்ககப் பொருள் பதப்படுத்துபவர்கள் ஆகியோர்களின் உற்பத்தி இடங்களுக்கு நேரடியாகச் சென்று கள ஆய்வு செய்து குறைபாடுகள் இல்லாத நிலையில் வாய்ப்புச் சான்றிதழ் வழங்குதல்.
9. பொதுமக்களிடம் புகார் ஏதேனும் எழும் பட்சத்தில் உழவர் குழுக்களின் நடவடிக்கையை கண்காணித்தல் மற்றும் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தல் ஆணையத்தின் (Food Safety and Standards Authority of India (FSSAI)) மூலமாக பெறப்படும் நுகர்வோர் புகார்களின் மீது நடவடிக்கை எடுத்தல்.
10. அரசிற்கும், பங்கேற்பு சான்றிதழ் செயலகத்திற்கும் ஆண்டு அறிக்கை தயாரித்து சமர்ப்பித்தல்.
11. மேலும் பங்கேற்பு உத்திரவாத சான்றளிப்பு செயலகத்திலிருந்து பெறப்படும் இதர ஆணைகளை செயல்படுத்துதல்.
12. அனைத்து உள்ளூர் குழுக்களும் பங்கேற்பு சான்றளிப்பு (PGS) நடைமுறைக்குட்பட்டு மாவட்ட அளவில் சான்றளிப்பு செய்யப்படுதல்.

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்